# மெட்ரோ ரயில் நிலையங்களில் இன்றும், நாளையும் இசை விழா

சென்னை, டிச.13: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமை (டிச.14, 15) ஆகிய நாள்கள் இசை மற்றும் கலைவிழா நடைபெறவுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் இரண்டு இசை அமைப்புகளுடன் இணைந்து இசை மற்றும் கலைவிழாவை நடத்தவுள்ளது. மெட்ரோ ரயில் நிலையங்களில் குழுவாகவும், தனி நபர் இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன.

இதில் பங்கேற்க விரும்புவோர் pro.cmrl@tn.gov.in, ampr.cmrl2@gmail.com என்ற இமெயில் முகவரிகளை தொடர்பு கொள்ளலாம்.